மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) கடந்த ஆறு மாதங்களில், உணவுப் பொருள் வழங்கல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மீது ஒழுக்கக் கண்காணிப்பு லஞ்ச ஒழிப்பு இயக்குநரால் மேற்கொள்ளப்பட்ட வழக்குகளின் விவரம் :—

	அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள்.	அரசிதழ் பதிவு பெருத அதிகாரிகள்.
	(1)	(2)
விசாரணைகள் மேற்கொள்ளப் பட்ட வழக்குகளின் மொதத எண்ணிக்கை.	7	9
தொடக்க விசாரணையின் பின்னர் தள்ளுபடி செய்யப் பட்ட வழக்குகளின் எண் ணிக்கை.	3	—
விரிவான விசாரணையின் பின்னர் தள்ளுபடி செய்யப் பட்ட வழக்குகளின் எண் ணிக்கை.	—	2
புலனுய்வு நடந்து வரும் வழக்குகளின் எண்ணிக்கை.	4	7

Kerosene

* 319 *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) the quantity of Kerosene allotted by the Government of India for distribution by the Oil Companies during each of the months from October, 1973 to February 1974; and

(*b*) whether any communication has been received from the Government of India regarding its availability in each of the coming months from March to June 1974?

மண்ணெண்ணெய்

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எண்ணெய் நிறுவனங்கள் மண்ணெண்ணெய் வழங்குவதற்காக 1973 அக்டோபர் முதல் 1974 பிப்ரவரி வரை ஒவ்வொரு மாதமும் இந்திய அரசு ஒதுக்கிய மண்ணெண்ணெய் அளவு யாது ?

(இ) அடுத்து வரும் 1974 மார்ச் முதல் ஜூன் வரை ஒவ்வொரு மாதத்திலும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு பற்றி தகவல் ஏதும் இந்திய அரசிடமிருந்து வந்துள்ளதா ?

1974 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ)

அக்டோபர் 1973—30,959 மெட்ரிக் டன்கள்.

நவம்பர் 1973—27,716 மெட்ரிக் டன்கள்.

டிசம்பர் 1973—24,995 மெட்ரிக் டன்கள்.

ஜனவரி 1974—26,611 மெட்ரிக் டன்கள்.

பிப்ரவரி 1974—21,801 மெட்ரிக் டன்கள்.

(இ) மார்ச்சு திங்களுக்காக மத்திய அரசு தமிழ் நாட்டுக்கு 22,011 டன் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்துள்ளது. ஏப்ரல், மே, ஜுன் திங்களுக் கான ஒதுக்கீடு குறித்துத் தகவல் எதுவும் மத்திய அரசிடமிருந்து வரவில்லை.

THIRU A. R. DAMODARAN : Sir, these quotas are being reduced month by month—from 30,900 Metric Tonnes to 21,900 Metric Tonnes. In view of the non-availability of kerosene, may I know whether the Government of Tamil Nadu will make a representation to the Government of India in this regard, especially in view of the fact that we will have a power-cut in April-June and there are many kerosene pumpsets, agricultural pumpsets, which would require kerosene?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதற்கான முயற்சியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கி றார்கள். அதன் காரணமாகத்தான் 20,000 கிலோ லிட்டர் என்று இருந்தது 21,000 கிலோ லிட்டர் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. மேலும் உயர்த்த வேண்டுமென்று கேட்பதில் இந்த அரசு தயக்கம் காட்டுவதாகக் கருத வேண் டாம். நாம் கேட்கலாம், அவர்கள் கொடுப்பார்களா, இல்லையா என்பது வேறு விஷயம். மின்சாரப் பற்றுக்குறையின் காரணமாக பம்ப்செட்டுகளுக்கு மண் ணெண்ணெய் உபயோகித்தால், அந்த மோட்டார்கள் ஒழுங்காக இருக்குமா, சீக்கிரமாகப் பழுதாகிவிடாதா என்பதையெல்லாம் அவ்வாறு உபயோகிப்பவர் கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் : தலைவரவர்களே, மின்சார பம்ப்செட் என்று சொல்லவில்லை. கெரொசின் பம்ப்செட்டுகள் உபயோகிக்கின்றார்களே, அவை களுக்குக் கொடுக்கப்படுமா என்பது தான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, பெட்ரோல் அல்லது டீசல் எண்ணெயில்தான் பம்ப்செட்டுகள் ஓடும். அம்மாதிரியான பம்ப்செட்டுகளில் மண்ணெண்ணெயை உபயோகித்தால், இன்ஜின்கள் கெட்டு

விடும். பெட்ரோல், டீசல் எண்ணெய் இவற்றில் ஓடி வந்தவைகளில் மண்ணெண்ணெயைப் பயன்படுத்தி வருகிறார்கள் என்று சொன்னார்கள். மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு இல்லாமல் இருந்ததோடு, விலையும் குறைவாக இருந்து வந்த காரணத்தால், அப்படிச் செய்து வந்தார்கள். டீசல் எண்ணெய் விலை அதிகமாக இருந்த காரணத்தினால், மண்ணெண்ணெயை வாங்கி லாரி பஸ்கள் இவற்றிலெல்லாம் பயன்படுத்தினார்கள். இப்பொழுது இரண்டுக்கும் விலையில் உள்ள வித்தியாசம் பைசா அளவிலேதான் இருப்பதால், மண்ணெண்ணெயை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை. விவசாயிகள் மண்ணெண்ணெயைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்களா என்பதும் மண்ணெண்ணெயை மட்டும் பயன்படுத்துகின்ற மோட்டார்கள் இருப்பதாகவும் தெரியவில்லை. அதுபற்றி விசாரித்துப் பார்க்க வேண்டும்.

THIRU A. R. DAMODARAN: Sir, since the Hon. Minister may have a wrong impression, I may state that there is a particular brand of kerosene engine called "A. V. Petter Engines", which run on kerosene oil. While I agree that some portion of kerosene was being used for running motor engines, I would like the Hon. Minister to kindly realise that agriculturists require kerosene in certain areas for kerosene pumpsets of 3 h.p. and 2 h.p. which have been manufactured by various companies. Therefore, since he may have a wrong impression that kerosene is wrongly used, I wish to correct the impression and tell him that such an engine exists and kerosene would be required for that purpose.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, மண்ணெண்ணெயைப் பயன்படுத்துகின்ற இன்ஜின்களும் இருக்கின்றன என்று சொல்கிறார். எப்பொழுதுமே தேவையான அளவுக்கு மண்ணெண்ணெய் கொடுக்கப்பட வேண்டும் என்று மத்திய சர்க்காருக்கு இந்த அரசு எழுதுவதற்குத் தயக்கம் காட்டாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5.00.)

THIRU G. VASANTHA PAI: Sir, do the Government receive supplies of kerosene in advance by three or four months or do they receive supply for a month only during that month?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, மாதா மாதம் போட்டுத் தான் அனுப்புகிறார்கள். ஒரு மாதம் முன்னதாக இண்டெண்டு வரும். அதற்குப் பிறகு இவ்வளவு கொடுப்பதாக அறிவிப்பார்கள்.

1974 ஏப்ரல் 11]

அதன் பிறகு நாங்கள் மணலி எண்ணெய் சுத்திகரிப்பு நிலயத்திலிருந்தும், கொச்சி எண்ணெய் சுத்திகரிப்பு நிலயத்திலிருந்தும் வாங்கிக்கொண்டிருக்கிறோம்.

THIRU G. VASANTHA PAI: Sir, the question refers to the quantity received from the Government of India and its availability in each of the coming months from March to June.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அதைத் தான் ஏற்கெனவே படித்தேன்.

Recommendations made at the conference of Transport Ministers of Southern States.

* 320 Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the recommendations made at the Conference of Transport Ministers of Southern States held in December 1972 at Coimbatore?

தென் மாநில போக்கு வரத்துத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட பரிவுரைகள்

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கோயம்புத்தூரில் 1972 டிசம்பரில் நடைபெற்ற தென் மாநில போக்கு வரத்துத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு அமைச்சர்கள் செய்த பரிவுரை குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மேலவை முன் விவர அறிக்கை யொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, இந்தப் பரிவுரைகளை நமது சர்க்கார் முழுவதும் ஏற்றுக்கொண்டதா? அப்படி ஏற்றுக்கொண்டிருந்தால், அந்தப் பரிவுரைகள் மேல் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி விவரங்கள் கூற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தப் பரிந்துரைகள் நான்கு மாநிலங்களின் அரசாங்கங்களும் ஏற்றுக்கொண்ட பரிந்துரைகள் ஆகும். அவைகளுடைய நடைமுறைகளைக் கண்காணிக்க வேண்டும் என்று தென்னகத்தைச் சேர்ந்த நான்கு மாநிலங்களும் சேர்ந்து ஒரு போக்குவரத்து ஆணைக் குழு அமைத்து அவர்கள் கண்காணித்து வருகிறார்கள். நாளாவட்டத்தில் அவைகள் நிறைவேறும்.

@ 117-122 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.